


Vol.28 | No. 07 | July 2024
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



## St. Alphonsa Feast
## July 28



Youth (SMYM) Camp, June 14-16, 2024, Sangamam



Mission Meet - Extended Territory,
June 22, 2024, Dhanushkodi



Kuzhandai Eso Iyakkam Anniversary,
June 6, 2024, Kalluvilai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 28 No :07 JULY 2024



# இறையருள்
# IRAIARUL

உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| TamilNadu Bishop's COUNCIL | 07 |
| மறைக்கல்வி | 15 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 18 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 19 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 23 |
| இல்வாழ்வு இயக்கம் | 24 |
| புனித வின்சென்ட் தே பவுல் சபை | 26 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 30 |
| மறைமாவட்ட செய்திகள் | 32 |
| மறைவட்ட செய்திகள் | 33 |
| தென்காசி மறைபரப்புதளம் | 41 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 42 |
| MONTHLY AGENDA – JULY 2024 | 43 |



## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Mr. S.M. Edwinson**

**Fr. Antony Thakidiyel**

**Mr. Iyathurai**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**R. Jesila Mary**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/159/2024**
**30 JUNE 2024**

**Dear Readers,**

Greetings and prayerful wishes from St. Mary of the Assumption Church, New York!

Saint Alphonsa, whose feast we celebrate on 28 July, was the first Indian woman to be canonised as a saint in the Catholic Church. Her life, though brief, was marked by profound faith, unwavering devotion, and heroic endurance of suffering. Born Anna Muttathupadathu in Kudamaloor, Kerala, India, she would become a shining example of holiness and inspiration for Catholics worldwide. In this circular, I want to highlight her spirituality, which can serve as a wonderful model in our journey towards holiness.

Anna was born on 19 August 1910 to Cherian Ousep and Mary Muttathupadathu. Tragedy struck early when her mother died just three months after her birth. Raised by her maternal aunt, Anna experienced a childhood marked by ill health and physical suffering. Despite these challenges, she developed a deep spirituality from a young age, drawing strength from her devotion to Christ. As a young woman, Anna faced pressure to marry, as was customary in her culture. However, she felt a strong calling to religious life. In a bold act of faith and determination, she deliberately injured her foot by stepping into a pile of burning embers to make herself less attractive as a potential bride. This act, while extreme, demonstrated her unwavering commitment to her vocation.

In 1927, at the age of 17, Anna joined the Franciscan Clarist Congregation. Upon taking her vows in 1936, she received the name Sister Alphonsa of the Immaculate Conception. Her life as a nun was characterised by simplicity, humility, and a deep love

for Jesus Christ. Saint Alphonsa's spirituality was characterised by a unique blend of mystical experiences, sacrificial love, and an unwavering commitment to her religious vocation despite numerous physical and mental challenges. Let me highlight some of the features of her spirituality, which we can emulate as we prepare to celebrate her feast.

Central to St Alphonsa's spirituality was her profound understanding and acceptance of suffering as a means of union with Christ. From a young age, she experienced various illnesses and accidents that caused her great pain. However, rather than viewing these trials as burdens, she embraced them as opportunities to participate in Christ's redemptive suffering.

St Alphonsa often referred to herself as a victim soul, willingly offering her pain for the salvation of others and the sanctification of priests. She wrote, "I have given myself up completely to Jesus. Let Him please Himself in His dealings with me. My only desire in this world is to suffer for the love of God and to rejoice in doing it." This attitude towards suffering was not merely passive acceptance but an active choice to transform her pain into a spiritual offering. She saw her bed of illness as an altar where she could unite her sufferings with those of Christ on the cross.

St Alphonsa's spirituality was deeply rooted in prayer. Despite her physical limitations, she maintained a rigorous prayer schedule, often spending hours in contemplation. Her prayer life was characterised by the following:

•Eucharistic devotion: She had a profound love for the Eucharist, considering it the source of her strength and consolation.

•Marian devotion: St Alphonsa had a special relationship with the Virgin Mary, whom she saw as a model of perfect discipleship and suffering.

•Contemplative prayer: She practised deep, silent prayer, often experiencing mystical union with God.

•Intercessory prayer: She prayed fervently for others, especially for the conversion of sinners and the sanctification of priests.

Despite her profound spiritual experiences, St Alphonsa maintained a childlike simplicity and humility. She never sought attention or special treatment, preferring to remain hidden and unknown. This aspect of her spirituality was reflected in her interactions with others, her writings, and her approach to religious life.

She often spoke of the ‘little way’ of spiritual childhood, similar to St Thérèse of Lisieux, emphasising trust in God’s love and the importance of small, everyday acts of love and sacrifice. St Alphonsa’s spirituality was deeply intertwined with her vocation as a Franciscan Clarist nun. Despite facing numerous obstacles, including opposition from her family and her ill health, she persevered in her desire to consecrate herself to God.

She saw her religious life as a means of complete self-giving to Christ. She writes: “I have entrusted myself entirely to the Lord. Let Him do with me as He pleases. My only desire in this world is to suffer for God's love and rejoice in doing so.” Intense mystical experiences marked St Alphonsa’s spiritual life. She often reported visions of Christ, the Virgin Mary, and various saints. These experiences, while profound, did not lead her to seek attention or consider herself special. Instead, they deepened her humility and desire to unite more closely with Christ in his suffering.

While St Alphonsa was largely confined to her convent due to illness, she understood her suffering as a powerful means of evangelisation. She offered her pain for the conversion of sinners, the sanctification of priests, and the growth of the Church. This understanding of suffering as a form of apostolate was a key aspect of her spirituality. Despite her constant pain, St Alphonsa maintained a joyful disposition. This joy, rooted in her love for Christ and her acceptance of God’s will, was a testament to the depth of her spirituality. She often encouraged others to find joy in their sufferings, seeing them as opportunities for growth in holiness.

Thus, we can surmise that St Alphonsa’s spirituality was characterised by a profound acceptance of suffering, a deep prayer life, childlike simplicity, love for her religious vocation, mystical experiences, and a joyful disposition despite constant pain. Her life and teachings inspire many, offering a powerful example of finding meaning and

purpose in suffering through union with Christ.

Her canonisation in 2008 brought global attention to this hidden saint from Kerala, highlighting the universal call to holiness and the transformative power of embracing one's cross in union with Christ. St Alphonsa’s spirituality offers a compelling model for those seeking to deepen their faith, especially in times of trial and suffering.

Saint Alphonsa’s brief life left an indelible mark on the Catholic Church, particularly in India. Her canonisation in 2008 by Pope Benedict XVI brought her story of humble faith and heroic virtue to a global audience. Today, she inspires Catholics worldwide to embrace their sufferings, persevere in faith, and seek a deeper union with Christ. As we face the challenges of the modern world, St Alphonsa’s life reminds us that true holiness is found not in grand gestures or remarkable achievements but in the faithful and loving acceptance of God’s will in our daily lives. Her example challenges us to find joy in simplicity, strength in suffering, and purpose in devotion to Christ.

Our Eparchy is fortunate to have a Shrine dedicated to St Alphonsa at Nagercoil. As in other years, we shall organise a solemn celebration this year. To prepare the faithful spiritually, I request that all parishes organise the novena in honour of St Alphonsa from 19-27 July.

We shall arrange the nadaipayanam (pilgrimage on foot) from the parishes to the Nagercoil shrine by the faithful on 20 July 2024. The SMYM department will take the initiative to organise the entire event. May I request all the priests to prepare the people to take part in this pilgrimage to the shrine!

On 26 July 2024, Most Rev. Albert George Alexander Anastas, bishop of Kuzhitharai, will celebrate the Holy Mass. After being appointed bishop, he is coming to our Eparchy for the first time, so let us welcome him wholeheartedly to our Shrine.

There is a possibility of organising Forane-level Qurbanas during the days of festivities. Kindly look at the schedule the organisers have prepared and urge the faithful of the respective Foranes to participate in these Qurbanas.

On 28 July 2924, the feast of St Alphonsa, Mar Paul Alappat, bishop of Ramanathapuram, will preside over the main Qurbana.

I encourage you, dear Fathers, to play an active role in making the celebration of the feast of St Alphonsa at our Shrine a meaningful experience for all our faithful. Your presence at the various events will be a witness to our people. I am sure the organisers will inform you of all the programmes for the celebration.

May the life and intercession of Saint Alphonsa continue to inspire and guide Catholics in their spiritual journey, reminding us of the profound depths of God's love and the transformative power of a life lived in complete surrender to Him!

July is an important month for us in our Syro-Malabar Church. On 3 July, we mark the solemnity of St Thomas, and on 28 July, as already mentioned, we celebrate the feast of St Alphonsa. We have already reflected on St Alphonsa in the introductory part of the circular. The feast of St Thomas the Apostle holds profound significance for our Church. For us, this feast is not only a religious observance but also a celebration of their cultural identity and spiritual heritage. It reinforces their connection to the early Christian church and their unique place in global Christianity. Let us mark the day with special liturgies, processions, and cultural events, reminding us of the deep-rooted Christian tradition in Kerala and the enduring legacy of St Thomas's mission.

May St Thomas and St Alphonsa intercede for each one of us that we may live our Christian and Priestly lives after the model of the Crucified Saviour, whose heart was pierced for our sake!

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Tamil Nadu Bishops' Council (TNBC)
Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)
TNLBC Secretariat | 22/45, Santhome High Road | Chennai - 600 004 | Tamil Nadu | India
T : 044-24611949 | P : 97512 08059 | E : tnbctnlbc@gmail.com | Web : www.tnbc.in

## தமிழக ஆயர் பேரவையின் இரங்கல் செய்தி

அனைவருக்கும் வணக்கம். 18-06-2024 தமிழக மக்களுக்கு ஓர் அதிர்ச்சி அளிக்கும் நாளாக அமைந்துவிட்டது. கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரி பகுதியில் விஷ சாராயம் அருந்தியவர்கள் ஒவ்வொருவராக இறக்கத் தொடங்கி, இன்றைய தினம் வரையில் 51 பேர் பலியாகி உள்ளனர் என்பது நமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது. தமிழகமெங்கும் இது பேரதிர்ச்சியையும், பெரும் அதிர்வலைகளையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. விஷ சாராயம் அருந்திய 144 பேர் மருத்துவமனைகளில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் 30 பேர் உயிருக்கு ஆபத்தான சூழலில் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தப் படுபாதகச் செயலில் ஈடுபட்டவர்கள் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற மாவட்டங்களிலும் அரசு தீவிர நடவடிக்கை எடுத்துவருகிறது.

இந்த அதிர்ச்சியான நிகழ்வில் உயிரிழந்த உறவுகளின் குடும்பங்களுக்கு நமது ஆழ்ந்த இரங்கலையும், இறை வேண்டலையும் சமர்ப்பிக்கிறோம். உயிருக்குப் போராடும் நோயாளிகள் விரைவில் குணமடையவும் வேண்டுகிறோம். தமிழ் மண்ணில் இத்தகைய மரணங்கள் இனிமேல் நடைபெறாதவாறு அரசு முழுக் கவனம் செலுத்தி இப்படிபட்ட இழி செயலில் ஈடுபடுகிறவர்களை, அவர்களுக்குத் துணையாகச் செயல்படுவோரை, கடமை தவறும் அதிகாரிகளை இரும்புக் கரம் கொண்டு அடக்கி தமிழகத்தைக் காப்பாற்ற அரசினைக் கேட்டுக்கொள்கிறோம். தமிழகம் சந்திக்கும் இந்தப் பெருந்துயரத்தில் துயரமான வேளையில் அரசியல் கட்சிகள் தங்கள் அரசியல் இலாபத்திற்காக இந்த நிகழ்வை பயன்படுத்திக் கொள்ளாமல் தமிழ்நாடு முழுவதும் இத்தகைய அநியாய மரணங்கள் இனியும் நிகழாதவாறு விழிப்போடு செயல்படவும், இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவரை கண்டுபிடித்து அவர்களுக்குச் சட்டத்தின் வாயிலாகத் தகுந்த தண்டனை வழங்க ஏற்பாடு செய்யவும் ஆளும் அரசுக்கு உதவவும் உறுதுணையாக இருக்கவும் கேட்டுக்கொள்கிறோம். இந்நிலையில் பொதுமக்கள் நாமும் போதைக்கும் மதுவுக்கும் எதிரான தீவிர செயல்பாடுகளில் ஈடுபடவேண்டிய கடமையை உறுதிப்படுத்துவோம்.

மக்களுக்கான விழிப்புணர்வு சிறந்த முறையில் வழங்கி நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் உருவாக்க விரும்பிய மது, மற்றும் போதையற்ற இந்தியாவும் தமிழகமும் உருவாக, அதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து உழைக்க வேண்டும் என அன்போடு வேண்டி மீண்டும் ஒருமுறை தங்கள் உறவுகளை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தமிழக ஆயர் பேரவைத் தலைவர் என்ற முறையில் தமிழகத் திரு அவையின் சார்பாக ஆழ்ந்த இரங்கலையும் இறை வேண்டலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

TAMIL NADU BISHOPS' COUNCIL President CHENNAI-600 004

+ George Antonysamy

Most.Rev.ஜார்ஜ் அந்தோணிசாமி
தலைவர்

## கைக்கார்கள் மற்றும் கணக்கர்கள் கூட்டம், சங்கமம்

ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை அனைத்து கைக்காரர்கள் மற்றும் கணக்கர்களுக்கான வருடாந்திர கூட்டம் சங்கமத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் காலை 9:30 மணிக்கு தொடங்கி மாலை 4:00 மணிக்கு முடிவடைந்தது, பல்வேறு தகவல் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கியதாகவும், பல அமர்வுகளைக் கொண்டதாகவும் இக்கூட்டம் அமைந்தது. திருப்பலியுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில், அருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில், பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் மற்றும் பேரருட்தந்தை ஜோன்சிலால் அரக்கப்பறம்பில் ஆகியோர் வகுப்புகளை நடத்தினர். திருச்சபையில் பொதுநிலையினரின் பங்கு, கைக்காரர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள், பங்கு பேரவையின் செயல்பாடுகள் மற்றும் பங்குகளில் பயன்படுத்தப்படும் கணக்கியல் முறைகள் குறித்து வகுப்புகளை நடத்தினர். தலைவர் உரையின் போது குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு, தங்கள் பங்குகளில் அவர்கள் செய்யும் தன்னலமற்ற மற்றும் தியாக சேவைக்கு மறைமாவட்டத்தின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் சுமார் 85 நபர்கள் பங்கேற்றனர்.

## இறுதி மரியாதை: அருட்சகோதரி ட்றீசா CMC

Rev. Sr. Treasa Collet CMC (84) ஜூன் 1, சனிக்கிழமை காலமானார். இவர், தக்கலை மறைமாவட்டத்தில் 40 வருடகாலம் அர்ப்பணமிக்க சேவையாற்றியவர். நெட்டா, களியல், முழுகோடு, பள்ளிகோணம், பேணு, புளியரை, குற்றாலம் மற்றும் வாஞ்சிநகர் போன்ற இடங்களில் பணியாற்றினார்.

**மறைமாவட்ட கல்வி நிலையங்களின் தரவரிசை மதிப்பெண் பட்டியல்**

**SSLC RESULT OF THE HIGH SCHOOLS**

| S.No | Name of the school | Students Appeared | Passed | First three Topper | Marks | Rank |
|---|---|---|---|---|---|---|
| 1. | Alphonsa Matric HSS Nagercoil | 206 | 206 | Shree Dhanshiya S | 497 | I |
| | | | | Anto Iniyan J | 497 | I |
| | | | | Evans Roch V R | 497 | I |
| 2. | A.P.J.M Matric HSS Soosaipuram | 112 | 112 | Bernisha B | 491 | I |
| | | | | Subisksha S P | 487 | II |
| | | | | Daphne D J | 482 | III |
| 3. | Jaya Matha Matric HSS Christurajapuram | 47 | 47 | Alphina J | 485 | I |
| | | | | Harsha M S | 468 | II |
| | | | | Herin Daniya B | 464 | III |
| 4. | Sacred Heart Matric HSS Padanthalumoodu | 97 | 97 | Sai Krishna | 496 | I |
| | | | | Jenifer M R | 492 | II |
| | | | | Reona P C | 491 | III |
| 5. | Carmel Matha Matric HSS Kovalam | 63 | 63 | Grace Resiba | 494 | I |
| | | | | Arokia Manisha | 480 | II |
| | | | | Arul Vinisha | 473 | III |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | Carmel Jyothi Matric HSS Pilankarai | - | - | Benita | 489 | I |
| | | | | Kishore R | 487 | II |
| | | | | Jenisha Libi W | 485 | III |
| 7. | Mount Carmel Matric HSS Muzhucode | 55 | 55 | Anlin Jefi R | 489 | I |
| | | | | Stebin S C | 481 | II |
| | | | | Abinaya M R | 471 | III |
| 8. | St. Joseph's Matric HSS lShenkottai | 121 | 118 | Kavya V | 493 | I |
| | | | | Robin C | 487 | II |
| | | | | Mohamed Nowsaths | 486 | III |
| 9. | St.Michael's Matric HSS lKattathurai | 96 | 96 | Auslin Lishma | 487 | I |
| | | | | Joel Shavio | 486 | II |
| | | | | Aldin Selcia S | 484 | III |
| 10. | John Paul II Matric HSS Kulasekharam | 89 | 89 | Reshima R | 494 | I |
| | | | | Ashwina AS | 490 | II |
| | | | | Jershiya JV | 489 | III |
| 11. | S. H. Convent Matric HSS Kazhuvanthittai | - | - | Ariha S D | 485 | I |
| | | | | Jegisha J | 477 | II |
| | | | | Kaviya S V | 475 | III |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | St. Mary's H.S. School kaliyal | 91 | 91 | Safa T | 484 | I |
| | | | | Subika S | 477 | II |
| | | | | Preethika J | 470 | III |
| 13 | Holy Family H.S.School Mukkoottukal | 59 | 58 | Derlin Jini R | 487 | I |
| | | | | Renilda A | 468 | II |
| | | | | Ashik S & Abisha M K | 462 | III |
| 14 | Pulari Matric HSS SChool Pudur, Shenkottai, Thenkasi | 15 | 15 | Manasha | 466 | I |
| | | | | Reshikesh | 404 | II |
| | | | | Kishore | 403 | III |
| 15 | St James H School Valiyavilai, Mangarai | - | - | Praisl P S | 485 | I |
| | | | | Sujith M S | 478 | II |
| | | | | Maha D | 470 | III |
| 16 | MMKM H School Varuthattu | 29 | 29 | ASHIKA P | 475 | I |
| | | | | ATHIRA | 472 | II |
| | | | | JEBISHA | 468 | III |
| 17 | Holy Family School Arukani | - | - | Hesia G | 477 | I |
| | | | | Linsa AS | 475 | II |
| | | | | Catherine A | 474 | III |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | Christ CMI Central School Anjugramam | 28 | 28 | | 95% | A1 |
| | | | | | 92% | A2 |
| | | | | | 91% | A3 |
| 19 | St.Joseph's School Pilankalai | 26 | 26 | Ashmi R | 477 | I |
| | | | | Ancy S | 467 | II |
| | | | | Santhiya R | 462 | III |
| 20 | St.Thomas School , Netta | | | | 457 | I |

**PLUS TWO RESULT OF THE HIGHER SECONDARY SCHOOLS**

| S.No | Name of the school | Students Appeared | Passed | First three Topper | Marks | Rank |
|---|---|---|---|---|---|---|
| 1. | Alphonsa Matric HSS Nagercoil | 232 | 232 | Guhanesh ML | 591 | I |
| | | | | Akshaya SReleka PS | 586 | I |
| | | | | Suja Shivani SA | 581 | I |
| 2. | A.P.J.M Matric HSS Soosaipuram | 120 | 119 | Anline Pranetha P | 562 | I |
| | | | | Varsha L | 562 | II |
| | | | | Michael David AM | 561 | III |
| 3. | Jaya Matha Matric HSS Christurajapuram | 53 | 53 | Aswini V | 547 | I |
| | | | | Jebarshia D | 545 | II |
| | | | | Athira MS | 536 | III |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4. | Sacred Heart Matric HSS Padanthalumoodu | 84 | 84 | Shefina S | 554 | I |
| | | | | Auxin RI | 546 | II |
| | | | | Sona S | 546 | III |
| 5. | Carmel Matha Matric HSS lKovalam | 71 | 69 | Shana Herni S | 555 | I |
| | | | | Keba Niyomi M | 542 | II |
| | | | | Paul Janise M | 537 | III |
| 6. | Carmel Jyothi Matric HSS Pilankarai | - | - | Aspana KM | 569 | I |
| | | | | Annie Udhaiya Rittiha GT | 562 | II |
| | | | | Jereena J | 554 | III |
| 7. | Mount Carmel Matric HSS Muzhucode | 37 | 37 | Angelin R S | 539 | I |
| | | | | Juslin J | 523 | II |
| | | | | Jenosha AJ | 520 | III |
| 8. | St. Joseph's Matric HSS Shenkottai | - | - | Meena Roshini G | 574 | I |
| | | | | Rookshana Munira S | 563 | II |
| | | | | Abraham Steve K | 563 | III |
| 9. | St.Michael's Matric HSS Kattathurai | 72 | 72 | Gracy E | 573 | I |
| | | | | Rinisha S | 564 | II |
| | | | | Vernisha V | 550 | III |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10. | John Paul II Matric HSS Kulasekharam | 99 | 99 | | 540 | I |
| | | | | | 538 | II |
| | | | | | 536 | III |
| 11. | S. H. Convent Matric HSS Kazhuvanthittai | 34 | 34 | Joornisha | 541 | I |
| | | | | Haritha Bhavani Shankar | 537 | II |
| | | | | Aswin | 534 | III |
| 12. | St. Mary's H.S. School kaliyal | 150 | 143 | Shilshiya VA | 536 | I |
| | | | | Anaha A | 515 | II |
| | | | | Ashika MA | 513 | III |
| 13. | Holy Family H.S.School Mukkoottukal | 58 | 57 | Serlin X | 532 | I |
| | | | | Sheema VS | 519 | II |
| | | | | Shreelekshmi S | 487 | III |

## கல்வியாண்டு தொடக்க விழா புனித மேரி இளங்குருமடம் முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் புனித மேரி இளங்குருமடத்தின் 2024-25 கல்வியாண்டின் தொடக்க விழா ஜூன் 29 சனிக்கிழமை நடைபெற்றது. மாலை 5:30 மணிக்கு மாலை நேர செபத்துடன் விழா ஆரம்பமானது. தொடக்க விழாவிற்கு பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமை தாங்கி கல்வியாண்டை அதிகாரப்பூர்வமாக தொடங்கி வைத்தார். முக்கூட்டுக்கல் பங்கைச் சார்ந்த அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

## "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15)

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

### மறைக்கல்வி ஆண்டுவிழா

2023 – 2024 மறைக்கல்வி ஆண்டின் ஆண்டுவிழா ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கமாக குட்டைக்கோடு மறைக்கல்வி மாணவர்கள் இறைவணக்கப் பாடல் பாடி விவிலியம் வாசித்து செபம் செய்தார்கள். தொடர்ந்து வாறுதட்டு மறைக்கல்வி மாணவிகள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். விழாவின்டையே நெட்டா ஆசிரியர்களின் குழுப்பாடலும், பளுகல், மாங்கரை, வயலின்கரை மாணவிகளின் குழு நடனங்களும் கண்களை கவரும் வண்ணமாய் அமைந்தன. முன்சிறை மறைக்கல்வி மாணவிகள்



கலைநிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள். கடந்த ஓராண்டு செயல் அறிக்கை காணொலி வாயிலாக திரையில் காண்பிக்கப்பட்டது. மேலும் மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி 25 வருடங்கள் ஜூபிலி கொண்டாடும் ஆசிரியர்களை ஊக்குவிப்பாளர் திரு. செல்வகுமார் ஆசிரியர் அவர்கள் வாழ்த்தி அறிமுகம் செய்து வைக்க, குருகுல முதல்வர் அவர்களால் பொன்னாடை போர்த்தி

கௌரவிக்கப்பட்டு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. தொடர்ந்து சீரோ-மலபார் திருச்சபை இணையதளம் வழியாக நடத்திய Sacrements and Sacramentals of the Syro Malabar Church எனும் வகுப்பில் பங்கேற்பாளர்களுக்கான சான்றிதழும் Mission quest 2023 மறைமாவட்ட விவிலிய வினாடி-வினாப் போட்டி மற்றும் போட்டித்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகையும் சான்றிதழும் திரு மரியதாஸ் ஆசிரியர் மற்றும் பேரருட்தந்தை ஜோஷி தேவலக்கர அவர்களால் வழங்கப்பட்டது. இறுதியாக முதல் மூன்று இடங்களை பெற்ற மறைக்கல்வி நிலையத்திற்கு சுழற்கோப்பை வழங்கப்பட்டது.

**இந்த வருடம் வெள்ளி விழா கொண்டாடும் ஆசிரியர்கள்**

- Mrs. Sheels Belcy Bai (25 Years) - Mangarai
- Sr. Lins SABS ( 25 Years) - Palappallam
- Mr. Raju (25 Years) - Manjalumoodu
- Mr. Merin S Kumar (25 Years) - Vayalinkarai
- Mrs. Mariamma Thomas(25 Years) - Netta
- Sr. Maria Mathew (25 Years) - Kalluvilai
- Mrs. Beena Xavier (25 Years) - Arukany
- Mrs. Kala Rani (25 Years) - Nithiravilai
- Mrs. Amalorpavam (40 Years) - Vayalinkarai
- Mrs. Beaula Angel (25 Years) - Vayalinkarai
- Sr. Dhanniya ASMI(25 Years) - Cheenivilai

## BEST SUNDAY SCHOOL

| S.NO | SUNDAY SCHOOL NAME | POINTS | RANK |
|---|---|---|---|
| SECTION A | | | |
| 1. | St. Little flower Manjalumoodu | 532 | I |
| 2. | St. Joseph, Soosaipuram | 484 | II |
| 3. | Holy Family, Mukkuttukal | 464 | III |

| | | | |
|---|---|---|---|
| SECTION B | | | |
| 1. | Sacred Heart, Pallikkonam | 460 | I |
| 2. | St. Mathew, Annikkarai | 426 | II |
| 3. | Deva Matha, Killiyoor | 394 | III |
| SECTION C | | | |
| 1. | Fathima Matha, Fathimapuram | 457 | I |
| 2. | Holy Family, Arukany | 456 | II |
| 3. | St. Mary, Thuckalay | 412 | III |

BEST SUNDAY SCHOOL TEACHERS

| S.NO | SUNDAY SCHOOL NAME | POINTS | RANK |
|---|---|---|---|
| 1. | Holy Family, Arukany | 206 | I |
| 2. | Holy Family, Mukkuttukal | 205 | II |
| 3. | St. Little Flower, Manjalumoodu | 204 | III |

**நன்றிகள்**

மறைக்கல்விப் பணிக்காக முழுமையான ஒத்துழைப்பு தருகின்ற அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஊக்குவிப்பாளர்கள், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுநிலையினர் அனைவருக்கும் குறிப்பாக மறைக்கல்வி ஆசிரியராக பணியாற்றி வெள்ளி விழா கொண்டாடும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மறைக்கல்வி நிலையம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குனர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குனர்***

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியுங்கள். ஆண்டவரின் அடியாருக்கு இதுவே ஏற்புடையது. (எபேசியர் 6 : 1)**

2023-24 கல்வியாண்டின் குழந்தை ஈசோ இயக்கத்தின் துவக்க விழா ஜூன் 11, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லுவிளை KKSSS அரங்கத்தில் நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தலைமையேற்று குத்துவிளக்கேற்றி, துவக்கவுரை ஆற்றி தொடங்கி வைத்தார்கள். தக்கலை மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் ராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். குழந்தை ஈசோ இயக்குனர் அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் அவர்கள் 2024-2025 கல்வியாண்டின் செயல் திட்டங்களை எடுத்துரைத்தார்கள். அருட்சகோதரி அமல் பிளஸ்ஸி அவர்கள் Icon of the year- Little Nellie of Holy God ன் வாழ்க்கை குறிப்புகளை எடுத்துரைத்தார்கள். மறைவட்ட ஊக்குவிப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இடையிடையே குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



ஜூன் 18 அன்று மறைமாவட்டத்திலுள்ள அனைத்து ஆலயங்களிலும் பங்களவில் குழந்தை ஈசோ இயக்கம் தொடங்கப்பட்டது. பங்களவில் சிறப்பு காணிக்கை பிரிக்கப்பட்டு குத்துவிளக்கேற்றி ஜெபத்துடனும் பங்குதந்தையர்களின் ஆசீர்வாதத்துடனும் தொடங்கப்பட்டது.

**இயக்குனர்**

**அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### நடுவண் செயற்குழு கூட்டம்

2024 ஜூன் 1, சனிக்கிழமை காலை 10 மணிக்கு மறைமாவட்ட இயக்குனர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடுவண் செயற்குழு கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தின் போது இளையோர் இயக்கத்திற்கு புதிதாக பொறுப்பேற்ற துணை இயக்குனர் தந்தை ஆன்டனி தகிடியேல் அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டார். தொடர்ந்து ஜூன் 14, 15, 16 தேதிகளில் நடைபெறவிருக்கும் “To Lead as Jesus Leads" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட இளையோர்களின் தலைமைத்துவ பயிற்சி முகாமை பற்றிய முக்கிய கருத்துக்கள் கலந்தாலோசிக்கப்பட்டது. தலைமைத்துவ பயிற்சி முகாமை வழிநடத்தும் விதமாக பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தொடர்ந்து இயக்குனர் தந்தை அவர்கள் தலைமைத்துவ பயிற்சி முகாம் வெற்றி பெற தேவையான அறிவுரைகளை வழங்கினார்கள்.

முகாமிற்கான இரண்டாவது தயாரிப்புக் கூட்டம், ஜூன் 9, ஞாயிற்றுக்கிழமை வாறுதட்டு, புனித சவேரியார் ஆலய வளாகத்தில் மதியம் 3 மணிக்கு மறைமாவட்ட இயக்குனர் தந்தை தலைமையில் நடைபெற்றது. அதே இடத்தில் மூன்றாவது ஆலோசனைக்கூட்டம் ஜூன் 23, ஞாயிற்றுக்கிழமை மதியம் 3 மணிக்கு மறைமாவட்ட இயக்குனர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைத்துவ பயிற்சி முகாமின் நிறை குறைகள் கலந்தாலோசிக்கப்பட்டது. இளையோர்களை மேலும் வலுப்படுத்த ஒவ்வொரு பங்கிற்கும் ஊக்குவிப்பாளர்கள் தேவை என்பதால் புதிய ஊக்குவிப்பாளர்களுக்கான தேர்தல் நடத்த திட்டமிடப்பட்டதோடு, புனித அல்போன்சா திருத்தல திருப்பயணத்திற்கு இளையோர்களை எவ்வாறு ஊக்குவிக்கலாம் போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

### தலைமைத்துவ பயிற்சி முகாம்

“To Lead as Jesus Leads" என்ற கருத்தினை மையமாகக் கொண்ட இளையோர்களின் தலைமைத்துவ பயிற்சி முகாமானது 2024 ஜூன் 14,15,16 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் தக்கலை சங்கமத்தில் காலை 09.30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. பல்லேறு பங்குகளிலிருந்து இளையோர்கள் இப்பயிற்சி முகாமிற்கு வருகை தந்திருந்தனர். சரியாக 10.30 மணிக்கு

தொடக்கவிழா களியல் மறைவட்ட இளையோர்களின் இறை வணக்கப்பாடலுடன் ஆரம்பமானது. நடுவண் செயற்குழு தலைவர் செல்வன் மனோஜ் அவர்கள் வரவேற்புரை கூறினார். தொடர்ந்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்கள். தொடக்கவுரையின்




போது மனிதரிடம் நம்பிக்கை வைப்பதை விட கடவுளிடம் நம்பிக்கை வைக்க வேண்டும் என்றும் கடவுளிடம் நம்பிக்கை கொண்டால் நம் வாழ்வில் தோல்வியே இல்லை என்றும் பல உதாரண கதைகளுடன் இளையோர்களை ஆன்மீக பாதையில் வழிநடத்தினார்கள். பின்னர் மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர் தந்தை அவர்கள் தலைமைத்துவ பயிற்சி முகாமின் நோக்கம் மற்றும் பயன்பாடுகள் குறித்து கூறியதோடு தலைமைத்துவ பயிற்சி முகாம் வெற்றி பெற அனைத்து இளையோர்களையும் உற்சாகப்படுத்தினார். தலைமைத்துவ பயிற்சி முகாமின் முதல் அமர்வு திருமதி வெளிச்சம் ஷெரின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வகுப்பானது வாழ்விற்கான நோக்கம் மற்றும் வாழ்வியல் இலக்கிற்காக ஒருவர் தன்னையே தயார்படுத்திக் கொள்வதின் அவசியம், என்ற பல தலைப்புகளின் கீழ் நடைபெற்றது. 02.15 மணியளவில் இரண்டாவது அமர்வு சென்னை JD அகாடமி/பயிற்சி மைய ஆசிரியர் அருட்பணி எட்வின் அவர்கள்



நடத்தினார். வகுப்பில் அரசு வேலைவாய்ப்பு பெறும் விதம் மற்றும் அதற்கான வழிமுறை குறித்து சிறந்த முறையில் கலந்தாலோசிக்கப்பட்டது. மூன்றாவது அமர்வானது திருமதி வெளிச்சம் ஷெரின் அவர்கள் தலைமையில் சமூகத்தின் கட்டமைப்பு என்ற தலைப்பில் மாலை 6 மணி வரை கருத்தமர்வு நடைபெற்றது. தொடர்ந்து 5 குழுக்களுக்கும் விவாதத்திற்கான நேரம் வழங்கப்பட்டது. சரியாக மாலை 7.15 மணியளவில் செபமாலை பவனியும், நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. இரவுணவிற்குப் பின் இரவு 8:40 மணியளவில் THE SPIRIT என்ற திரைப்படம் திரையிடப்பட்டது. தலைமைத்துவ பயிற்சி முகாமின் இரண்டாம் நாளான ஜூன் 16 சனிக்கிழமை காலை 06.45 மணியளவில் இயக்குநர் தந்தை பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.

அன்றைய முதல் அமர்வானது அருட்தந்தை பெலிக்ஸ் அவர்களால் நடத்தப்பட்டது. முதல் அமர்வின் போது அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் சிந்தனையை தூண்டும் விதமான பல கேள்விகளை எழுப்பி இளையோர்களுடன் உரையாடினார். பின்னர் தற்போதைய சூழலில் வேலைவாய்ப்பு எப்படி இருக்கிறது



மற்றும் இளையோர்கள் எப்படி வேலையை எதிர்பார்க்கிறார்கள் என்ற தலைப்புகளின் கீழ் மிகவும் தெளிவான முறையில் வகுப்பை மேற்கொண்டார்கள். இரண்டாம் அமர்வானது 11.30 மணிக்கு ஆரம்பமானது. இரண்டாம் அமர்வின் போது இளையோர்களின் சிந்தனையை வலுப்படுத்த TASK கொடுக்கப்பட்டது. TASK என்னவென்றால் ஆரோக்கியமான ஒரு பொருள் மலிவான விலையில் கிடைக்க இளையோர்கள் என்ன செய்ய முடியும் என்பதே. குழுக்களாக பிரிக்கப்பட்ட இளையோர்கள் தெளிவான முறையில் தங்கள் கருத்துக்களை சிறப்பாக எடுத்துரைத்தனர். இறுதியாக 15 நிமிடம் இளையோர்களை உற்சாகப்படுத்தும் வாழ்வியல் அறிவுரைகள் வழங்கினார்கள். 02.30 மணியளவில் மூன்றாவது அமர்வு அருட்தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் நடத்தினார். அமர்வானது அரசியல்,

மற்றும் இந்தியாவின் அரசியலமைப்பு என்ற தலைப்புகளின் கீழ் நடத்தப்பட்டது. 03.00 மணியளவில் கலந்துரையாடல் நடைபெற்றது. 4.15 மணியளவில் நான்காம் அமர்வு ஆரம்பமானது. அரசியலமைப்பு மற்றும் குடிமக்களின் அதிகாரம் குறித்த வகுப்புக்கள் நடத்தப்பட்டது. வகுப்பின் போது அதிகாரமுடைய குடிமகனாக மாறுவது எப்படி என்ற வினாவை கொண்ட விவாதமும் நடைபெற்றது. 7 மணியளவில் ஆராதனை மற்றும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. மூன்றாம் நாளான ஜூன் 17, ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணியளவில் இயக்குநர் தந்தை தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து 09.30 மணியளவில் அமர்வு ஒன்றானது இயக்குனர் தந்தை அவர்களால் வழிநடத்தப்பட்டது. முதல் அமர்வின் போது காணொலிக்காட்சி திரையிடப்பட்டது. திரையிடப்பட்ட காணொலிக்காட்சியை மையமாகக் கொண்டு குழுவிவாதம் நடைபெற்றது. 11.30 மணியளவில்நடைபெற்ற இரண்டாம் அமர்வின் போது பேசிய தந்தை இளையோர்களால் அனைத்தும் செய்ய முடியும் என்றும் அதற்காக தங்களை தாங்களே வடிவமைக்க வேண்டும் என்றும் கூறியதோடு இளையோர்களுக்கு தன்னம்பிக்கை மிகுதியாக அறிவுரை கூறினார்கள். தலைமைத்துவ பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் நடுவண் செயற்குழு ஆலோசகர் செல்வி சுபிலா நன்றி கூறினார். இறுதியாக இயக்குநர் தந்தையின் இறுதி ஆசீருடன் தலைமைத்துவ பயிற்சி முகாம் நிகழ்வுகள் நிறைவுப் பெற்றது.








**இவண்**
**அகில், செயலர்**

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

## உலக சுற்றுச்சூழல் தினம்




இயற்கை தொடர்பான பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 இல் உலக சுற்றுச்சூழல் தினம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் அனுசரிக்கப்படுகிறது. இந்த வருடம் 28 மையங்களில் உலக சுற்றுச்சூழல் தினக் கொண்டாட்டம் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக ஒவ்வொரு மைய பங்குத்தந்தையர்கள், பொறுப்பாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து பிளாஸ்டிக்கை குறைத்தல் என்ற கருத்தினை மையமாக வைத்து மரம் நடுதல், மரக்கன்றுகளை இலவசமாக வழங்குதல் மற்றும் பிளாஸ்டிக் இல்லாத வளாகம் உருவாக்குதல் போன்றவை நடைபெற்றது. இந்த நிகழ்வுகளை களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

## வாழ்த்துக்கள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தில் ஜூன் 27 திருவிதாங்கோடு அரைப்பள்ளி மேலாளர் தந்தை பர்சிலீபி ரம்பான் அவர்கள் வருகை புரிந்தார். கிராமப்புற ஆலயத்தின் தலைமை மேலாளர் தந்தை என்ற பொறுப்பு கிடைத்தமையால் கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் தந்தை பர்சிலீபி ரம்பான் அவர்களுக்கு இயக்குநர் அருட்தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் சால்வை அணிவித்து வாழ்த்தினார்கள்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***




## இல்வாழ்வு இயக்கம்

### மறைமாவட்ட பொறுப்பாளர்களின் கூட்டம்

மாதர்ஜோதிஸ் பொறுப்பாளர்களின் கூட்டமானது ஜூன் 08, சனிக்கிழமை மதியம் 02.00 மணியளவில் கல்லுவிளை KKSSS அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பேசிய அவர் மறைவட்ட இயக்குனர்கள் மறைவட்ட அளவில் கூட்டம் நடத்தி ஒரு வருட செயல்பாடுகளின் திட்டம் தயார் செய்து மறைமாவட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என கூறப்பட்டது. பின்னர் இயக்குனர் தந்தை அவர்கள் 2024 - 2025ஆம் ஆண்டிற்கான போட்டிகளை அறிமுகப்படுத்தியதோடு போட்டிக்கான விதிமுறைகளையும் கூறினார். கூட்டமானது சரியாக 3.30 மணியளவில் நிறைவடைந்தது.



இயக்குனர் அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் ஜூன் 16 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 மணிக்கு பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் செயல்படும் மாதர் ஜோதிஸ் இயக்கம் பார்வையிடப்பட்டது. அருட்தந்தை அவர்கள் தாய்மார்களிடம்

கலந்துரையாடினார். கலந்துரையாடலின் போது நிறை குறைகள் கேட்டறியப்பட்டது

## புதிய ஏற்பாடு திருவிவிலியம் எழுதி சமர்ப்பித்தல்

தவக்காலத்தில் மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக தாய்மார்களுக்கு புதிய ஏற்பாடு திருவிவிலியம் எழுதும் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தாய்மார்கள் பலர் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தாங்கள் எழுதிய திருவிவிலியத்தை மே மற்றும் ஜூன் மாதத்தில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் சமர்ப்பித்தனர்.



## மது அடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளையில் செயல்படும் மது அடிமை மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மன நோயாளிகளுக்கான சிகிட்சையும் ஆற்றுப்படுத்துதலும் ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் நடைபெற்று வருகின்றது. முதல் மற்றும் மூன்றாவது திங்கள் கிழமையில் மதியம் 12 மணி அளவில் மன நலமருத்துவர் வருகை புரிவார். மருத்துவர் வருகை தரும் நாட்களில் பலர் ஆலோசனை பெற்றுச் செல்கின்றனர். இம்மையத்தில் இருந்து சிகிச்சை பெற்றவர்கள் பலர் நலமடைந்துள்ளனர்.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

**மாலைக்கோடு** திருச்சிலுவை ஆலயத்தில் இயங்கி வரும் புனித அகஸ்டின் பெண்கள் கிளைச்சபையில் இருந்து கூடுதலாக புனித யோசேப்பு இளையோர் கிளைச்சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களால் ஜூன் 7 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் தக்கலை மத்திய சபை உறுப்பினர் சகோ. வில்சன் அவர்கள் கலந்து கொண்டு சபையின் கோட்பாடு பற்றி இளைஞர்களுக்கு எடுத்து கூறினார்கள். ஒருங்கிணைப்பாளராக சகோதரி குமாரி அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். கூட்டத்திற்கு மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் அவர்கள் கலந்து கொண்டார். மாலைக்கோடு திருச்சிலுவை ஆலயத்தில் இயங்கி வரும் புனித அகஸ்டின் பெண்கள் கிளைச்சபையிருந்து



திருமதி சுனிதா என்பவரின் மகளின் படிப்புச் செலவுக்காக ரூ 10,000 நிரந்தர வைப்பு நிதியாகாக வங்கியில் போடப்பட்டு அதன் பத்திரத்தை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் வழங்கினார்கள். கூட்டத்தில் மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் பங்கேற்று அவர்கள் படிப்பிற்கான முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்கள்.

**மஞ்சாலுமூடு வட்டார சபை** கூட்டமானது. ஜூன் 9 ஞாயிற்றுக்கிழமை மதியம் 3.00 மணிக்கு தலைவர் ஜார்ஜ் வின்சென்ட அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. கூட்டத்தில் புதிய ஆன்மீக ஆலோசகராக பொறுப்பேற்ற பேரருட்தந்தை மார்ட்டின் அவர்கள் கலந்து கொண்டு கிளைச்சபை

தலைவர்களுக்கு ஆன்மீக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து மஞ்சாலுமூடு வட்டார சபையில் இருந்து குமரி கூட்டமைப்பு சார்பாக தக்கலை அமலா மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற போட்டியில் கலந்து கொண்ட 3 மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கினார். பின்னர் தலைவர் உரையுடன் கூட்டம் 4.30 மணிக்கு நிறைவடைந்தது.

**தக்கலை மத்திய பேரவையின் கீழ் இயங்கும் உத்தரங்கோடு** ஓசானாம் உயர் கல்வி நிலையத்தின் கோடைகால பயிற்சியின் நிறைவு மற்றும் டான் போஸ்கோ கல்வி நிறுவனத்தின் வகுப்பு தொடக்கவிழா ஜூன் 17 திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்கு தொடங்கப்பட்டது. இவ்விழாவின் தலைவராக மத்திய சபையின் தலைவர் சகோ றாபி அவர்கள் கலந்து கொண்டு தலைமையுரை




ஆற்றினார்கள். மஞ்சாலுமூடு வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். பின்னர் டான் போஸ்கோ கல்வி நிறுவனத்தின் இணை இயக்குநர் திரு. விதின் கிருஷ்ணா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். காண்போர் களிப்புறும் வகையில் இடையிடையே மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் பயிற்சியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு சுமார் 4 மணியளவில் விழா நிறைவடைந்தது.

## சுழற்சி திட்டம் வழங்கும் விழா

நித்திரவிளை வட்டார சபைக்கு உட்பட்ட முஞ்சிறை பங்கில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் (ஆண்கள்) கிளை சபை சார்பில் திட்டம் வழங்குதல் ஜூன் 23, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கிளைச்சபையின் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் பயனாளிகளுக்கு திட்டத் தொகை வழங்கி சிறப்பித்தார். சுழற்சி முறையில் நடைபெறும் இத்திட்டமானது 7 நபர்களுக்கு தலா 10,000 வீதம் ரூபாய் 70000 வழங்கப்பட்டது. இந்நிகழ்வில்

வட்டார சபையின் தலைமைப் பணியாளர் சகோதரர் லால் கலந்துகொண்டு திட்டம் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்கள். இதற்குரிய ஏற்பாடுகளை கிளைசபை தலைவரோடு இணைந்து உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

பிலாங்காலை வட்டார சபைக்கு உட்பட்ட காட்டாத்துறை பங்கில் செயல்படும் புனித வின்சென்ட் தே பவுல் ஆண்கள் கிளை சபையில் சுழற்சி திட்டமானது ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. கிளை சபை தலைவர் சகோதரர் மானெக்ஸ் பயனாளிகளை அறிமுகம் செய்து வைத்தார். ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் முதல் திட்டத் தொகையை பயனாளிக்கு வழங்கி நிகழ்வினை தொடங்கி வைத்தார். மத்திய சபையின் திட்ட அலுவலர்



சகோதரர் எட்வின்சன் திட்டம் குறித்து பயனாளிகளுக்கு விவரித்து கூறினார். வட்டார சபை தலைவர் சகோதரர் கிறிஸ்து தாஸ் ஆலோசனைகள் வழங்கினார். ரூபாய் 10000 வீதம் 6 நபர்களுக்கு திட்டத் தொகையானது வழங்கப்பட்டது.

## புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் சூசைபுரம்

சூசைபுரம், புனித சூசையப்பர் ஆலயத்திற்குட்பட்ட பகுதியில் குடும்பச் சூழல் காரணமாக வீடு கட்டி முடிக்க இயலாத ஒரு குடும்பத்தாருக்கு புனித வின்சென்ட் தே பவுல் சபையின் புனித சூசையப்பர் கிளை சபையின் வழிகாட்டுதலில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. பங்குத்தந்தையும் கிளைச்சபையின் ஆன்மீக ஆலோசகருமாகிய பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் பெரும் முயற்சியினாலும், கிளைச் சபையின் வழிகாட்டுதலின் படியும், பங்கு மக்களின் ஆதரவோடும் அந்த வீடானது சுமார் 2,50,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணியளவில் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ்



அவர்கள் அந்த வீட்டை ஆசீர்வதித்து திறந்து வைத்தார்கள். இதற்காக உழைத்த கிளைச்சபை தலைவர் மற்றும் உறுப்பினர்களையும் உதவிய பங்கு மக்களையும் பங்குத்தந்தை சிறப்பாக பாராட்டினார்கள்.

***சகோ. D.Pஷாஜி***
***தகவல் தொடர்பு அலுவலர்***

## *விரிவுபடுத்தப்பட்ட மறைபரப்புத்தளக் கூட்டம்*

ஜூன் மாதத்திற்கான விரிவுபடுத்தப்பட்ட மறைபரப்புத்தளத்தில் உள்ள அருட்தந்தைகள் மற்றும் அருட்சகோதரிகளுக்கான கூட்டம் ஜூன் 22, 2024 சனிக்கிழமை இராமேஸ்வரம் புனித சூசையப்பர் மறைபரப்புத்தளத்தில் நடைபெற்றது. நிகழ்வுகள் காலை 10:00 மணிக்கு ஆராதனை மற்றும் ஒப்புரவுடன் ஆரம்பமானது. கூட்டத்திற்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார்கள். இந்த சந்திப்பின் போது, அருட்தந்தைகள் மற்றும் அருட்சகோதரிகள் தங்கள் பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அருட்சகோதரி லிசி ஜோஸ் FCC மற்றும் அருட்சகோதரி சிசி FCC மறைபரப்புத்தள பணிக்காக புதிதாக நியமனம் செய்யப்பட்டிருந்தனர். எனவே இக்கூட்டத்தின் போது அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்தைத் தொடர்ந்து, திருப்பலியானது குருகுல முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

# அருட்சகோதரர்களிடமிருந்து

**ஈசோவில் அன்பார்ந்தவர்களே,**

சென்னை, பூந்தமல்லி திரு இருதய உயர் குருமடம் ஜூன் 3 திங்கட்கிழமை புதிய கல்வியாண்டிற்காகத் திறக்கப்பட்டது. ஜூன் 21 குருமடத்தில் திரு இருதய விழா சிறப்புடன் கொண்டாடப்பட்டது. கும்பகோணம் ஆயர் டாக்டர் ஜீவானந்தம் அமலநாதன் அவர்கள் தலைமை வகித்தார். கொண்டாட்டத்திற்குப் பின், ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயர் டாக்டர் ஜீவானந்தம் அமலநாதனுக்கு பாராட்டு விழாவும் நடத்தப்பட்டது. ஆயர் அவர்கள் திரு இருதய குருமடத்தின் முன்னாள் மாணவர் மட்டுமல்ல பேராசிரியராகவும் பணியாற்றியவர்.

உரோமையில் இறையியல் பயிலும் அருட்சகோதரர் ஜூபின் அவர்களுக்கு தேர்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. புனித ஜோசப் போன்டிஃபிகல் குருமடம் மே 31, வெள்ளிக்கிழமை மீண்டும் திறக்கப்பட்டது. அங்கு திவ்ய நற்கருணையின் திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. சகோதரர்கள் டோனி மற்றும் டெபின் மங்கலப்புழாவில் நலமாக இருக்கிறார்கள். மேரி மாதா உயர் குருமடம் திருச்சூர் மே 27, 2024 இல் மீண்டும் திறக்கப்பட்டது. சகோதரர் ஸ்ரீஜித் குருமட பாடகர் குழுவில் ஒருவராக தேர்வு செய்யப்பட்டுள்ளது பாராட்டுதற்குரியது. நல்ல ஆயன் மற்றும் குந்நோத் குருமடங்கள் மே 31 வெள்ளிக்கிழமை அன்று மீண்டும் திறக்கப்பட்டது.

களப்பணியாற்றும் அருட்சகோதரர்கள் தங்கள் திருத்தொண்டு பணிகளை ஆர்வமுடனும் ஊக்கமுடனும் செய்து வருகின்றனர். ஜூன் 13 இல் அருட்சகோதரர்கள் ஆன்டனி மோனிஷ் மற்றும் திருத்தொண்டர் சுனில் ஆகியோர் தங்களது பெயர் கொண்ட விழாவை கொண்டாடினர். ஜூன் 17 திங்கட்கிழமை அருட்சகோதரர் ஜஸ்டின் அவர்கள் ரூகாலயா குருமடத்திற்கு வருகை புரிந்தார். அருட்சகோதரர்கள் வின்சிலின் மற்றும் பிபின் ஆகியோருக்கு பல்கலைக்கழக தேர்வுகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது. இறையருளால் அருட்சகோதரர்கள் அனைவரும் இனிதே செயலாற்றிட ஜெபித்து கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி.

***அருட்சகோதரர்கள் யோசேப் & வின்சிலின்***

| BIRTHDAY OF REV. FATHERS, JULY- 2024 | |
|---|---|
| FR. JITHIN THOMAS MCBS | 06 |
| FR. LIJU MARATTUKALAM | 09 |
| FR. SANJOMON THENEPLACKAL | 18 |
| FR. MICHAEL AROKIASWAMY SDB | 26 |
| **FEASTDAY OF REV. FATHERS- JULY- 2024** | |
| FR. ABY POOVATHUMMOOTTIL | 03 |
| FR. AJEESH ATTIYIL | 03 |
| FR. JIJI KOIPPURAM | 03 |
| FR. JOHNSON THOMAS MCBS | 03 |
| FR. ROBINS KUZHIKODIL | 03 |
| FR. THOMAS POTTEMPARAMPIL MCBS | 03 |
| FR. TINU KOTTACKAPARAMPIL CMI | 03 |
| FR. THOMAS SATHIANESAN | 03 |
| FR. THOMAS POWATHUPARAMPIL | 03 |
| FR. THOMAS SAURIAMKUZHY | 03 |
| FR. THOMAS THEKKETHALA CMI | 03 |
| FR. JOICE CHELACHUVATTIL MCBS | 15 |
| FR. JOMY KAMUKUMMATTATHIL | 15 |
| FR. KURIAN MATHEW KOIPURAM | 15 |
| FR. RAJESH VAYALUMKAL MCBS | 15 |
| FR. SANJOMON THENEPLACKAL | 15 |
| FR. CHACKO PUTHIYAPARAMPIL | 25 |
| FR. JACOB AIYAMMATHRA | 25 |
| FR. SHAN AYALLOOR | 25 |
| FR. TOJI PARAMBILPARAMBIL | 25 |
| FR. VINOD KANAKALIL | 25 |

# மறைமாவட்டச் செய்திகள்

## பொதுநிலையினர் பேரவைக் கூட்டம்

மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை உறுப்பினர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு ஜூன் 2, 2024 இல் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. பொதுநிலையினர் பேரவை இயக்குனர் தந்தை வினு D ஜோசப் அவர்கள் தலைமையில் திருப்பலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. காலை 11:30 மணிக்கு பொதுக்கூட்டம் தொடங்கியது. பேரவைப் பொருளாளர் Adv. ராஜ எரிக் காட்வின், அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த அமர்வு நடைபெற்றது. அமர்வினை அருட்தந்தை காட்வின் செல்வ ஜஸ்டஸ் அவர்கள் வழிநடத்தினார்கள். மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு, திரு. செலஸ்டின் ஆசிரியர், கத்தோலிக்க விசுவாசிகள் ஏன் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பது குறித்து ஒரு சிறந்த உரையை நிகழ்த்தினார். மேலும், அரசாங்கத் துறைகளால் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைப் பற்றி விளக்கினார். கருத்தரங்கின் நிறைவு அமர்வுக்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். பொதுநிலையினர் சங்க தலைவர் வழக்கறிஞர் தனசிங் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். கூட்டமானது ஆயர் அவர்களின் இறுதி ஆசியுடன் பிற்பகல் 3:00 மணிக்கு நிறைவடைந்தது. கருத்தரங்கில் பல்வேறு பங்குகளைச் சேர்ந்த சுமார் 69 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## குருக்களுக்கான கூட்டம்

மறைமாவட்ட குருக்களுக்கான கூட்டமானது ஜூன் 18, செவ்வாய்க்கிழமை சங்கமத்தில் காலை 9:30 மணிக்கு தொடங்கியது. ஆராதனை மற்றும் ஒப்புரவு அருளடையாளத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. காலை 11:15 மணிக்கு, கூட்டம் தொடங்கியது, குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த நிகழ்வின் போது, அருட்பணி பேரவையில் புதிதாக சேர்ந்த அருட்தந்தை ஜார்ஜ் கலங்கரா SDB மறைமாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர், அருட்தந்தை ஜோசப் (பிபின்) கொச்சீத்ரா, மேழக்கோடு பங்கின் பங்குத்தந்தை, ஆகிய இரண்டு புதிய அருட்தந்தைகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. கூட்டத்தின் போது புனித அல்போன்சா திருவிழா மற்றும் நடைபயண ஒருங்கிணைப்பு குறித்த முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய திருவிழாவானது மே 2024 31, வெள்ளிக்கிழமை முதல் ஜூன் 8, சனிக்கிழமை வரை 9 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மாலை 6:30 மணிக்கு பங்கு தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள். திருவிழாவின் ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலையும், 6:00 மணிக்கு திரு இருதய நவநாள் செபமும், மாலை 6:15 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது. மூன்றாம்



நாள் திருப்பலி காலை 9 மணிக்கு மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் ஆறு குழந்தைகள் முதல் திருவிருந்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆறாம் நாள் திருவிழா திருப்பலிக்கு பின் செபமாலை பவனியும், ஏழாம் நாள் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும், எட்டாம் நாள் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. இறுதி நாள் ஆடம்பர திருப்பலிக்கு பின் தேர் பவனியும் அதைத்தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

### புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை புனித பவுலடியாரின் திருவிழாவை முன்னிட்டு மாலை 6.30 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து திருப்பவனியும் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசாள் ஆலயம் மஞ்சாலுமூடு

புனித குழந்தை தெரசாள் ஆலயம் மஞ்சாலுமூட்டில் தட்டான் விளை என்னும் இடத்தில் காலம் சென்ற மரியம்மா பாட்டியின் மகன் பிரான்சிஸ் (வயது 40) என்பவரை கவனிக்க யாரும் இல்லாததால் பங்கு தந்தை தலைமையில் தோலடி என்னும் இடத்தில் உள்ள காருண்யா காப்பகத்தில் விடப்பட்டார்.



2023 - 2024 கல்வியாண்டிற்கான சிறந்த மறைக்கல்வி நிலையத்திற்கான முதல் பரிசும், சிறந்த ஆசிரியர்களுக்கான மூன்றாவது பரிசும் மறைமாவட்ட அளவில் புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூட்டிற்கு கிடைத்தது. இதற்காக அயராது உழைத்த முன்னாள் பங்கு தந்தை ஆகஸ்டின் தலோடில் அவர்களுக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பங்கு மக்கள் அனைவர் சார்பிலும் நன்றி கூறப்பட்டது.

## களியல்

### புனித மரியன்னை மறைவட்ட ஆலயம் – களியல்

ஒவ்வொரு வருடமும் ஜூன் ஐந்தாம் நாள் உலக சுற்று சூழல் தினமாக கொண்டாடப்படுகிறது. நமது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பது நமது கடமையாகும். களியல் பஞ்சாயத்து பகுதியை தூய்மைப்படுத்துவதற்காக களியல் பங்கை சேர்ந்த தூய்மை பணியாளர் திருமதி சசிகலா அவர்களை மாதர் ஜோதிஸ் அமைப்பின் சார்பாக பேரருட்தந்தை தோமஸ் தெக்கேதல அவர்கள் தூய்மை பணியை ஊக்குவிக்கும் விதமாகவும், நன்றி செலுத்தும் விதமாகவும் பாராட்டு தெரிவித்தார்.

## புதிய பங்குத்தந்தை வரவேற்பு நிகழ்வு



## மாதர் ஜோதிஸ் இயக்கம் வாயிலாக கல்வி உதவி

களியல் மரியன்னை ஆலயத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் மாதர் ஜோதிஸ் இயக்கம் வாயிலாக பள்ளி பயிலும் ஏழை மாணவர்களுக்கு புத்தகப்பை பாசமிகு



பங்குதந்தை அருட்தந்தை தோமஸ் தெக்கேதலா அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலய மறைக்கல்வி புதிய கல்வியாண்டு தொடக்க விழா, ஜூன் 2, ஞாயிற்றுக்கிழமை திருப்பலியை தொடர்ந்து நடைபெற்றது. மறைக்கல்வி ஆசிரியர்கள் மெழுகுவர்த்தி ஏந்தி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். ஜூன் 09 ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்கு பின் மிஷன் லீக் மாணவர்களுக்கு உருவாக்கல் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கடவுளின் அன்பு குறித்தும், நம்பிக்கை வாழ்வில் மாணவர்களின் பங்கேற்பு குறித்தும் குறும்படம் வாயிலாக மறைகல்வி ஆசிரியர் மெரின் சுஜித் அவர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டது.



முன்னாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி சிறியக் கூட்டுமேல் அவர்களின் 5 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஜூன் 30, ஞாயிற்றுக்கிழமை திருப்பலி மற்றும் ஒப்பிசு நடைபெற்றது. தொடர்ந்து கல்லூரியில் பயிலும் 2 மாணவர்களுக்கு அருட்தந்தை சிறியக் கூட்டுமேல் நினைவு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை அருட்பணி ஜெஸ்டின் சுதீஷ் தலைமையிலான குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## சூசைபுரம்

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

ஜூன் 02, ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்கு பின்னர் மறைக்கல்வி தொடக்கவிழா நடைபெற்றது. மறைக்கல்வி தொடக்கவிழாவின் போது மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் நடத்தப்பட்டது. பங்குத்தந்தை, தலைமை ஆசிரியை, மறைக்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பக்த இயக்க பிரதிநிதிகள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். ஜூன் 09, ஞாயிற்றுக்கிழமை திருப்பலிக்குப் பின்னர் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா பங்களவில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. பங்கு மக்கள் வாழ்த்துரை வழங்கியும் பூங்கொத்து மற்றும் பரிசுகள் வழங்கியும் தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். புனித அல்போன்சா கல்லூரி முதல்வர் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள்.

ஜூன் 10 திங்கட்கிழமை காலை திருப்பலிக்கு பின்னர் பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களுக்காக சிறப்பு ஜெபம் நடத்தப்பட்டது. பங்குத்தந்தை அவர்கள் மாணவர்களுக்காக ஜெபம் செய்து அவர்களுக்கு சிறப்பு ஆசி வழங்கினார்கள். ஜூன் 16 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்குப் பின்னர் புனித வின்சென்ட்

தே பவுல் சபை புனித சூசையப்பர் கிளைச் சபையின் புதிய தலைமைப் பணியாளர் சகோ. ராஜ், துணைத் தலைமைப் பணியாளர் சகோ. மரிய தாஸ், செயலாளர் சகோ. ராஜாமணி, பொருளாளர் சகோ. மரிய ஆரோக்கியம் ஆகியோர் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் மற்றும் தக்கலை மத்திய சபையின் துணைத்திட்ட அலுவலர் சகோ. கிறிஸ்துதாஸ் ஆகியோர் முன்னிலையில் மெழுகுதிரி ஏந்தி உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



ஜூன் 24 ஞாயிற்றுக்கிழமை இறை அழைத்தலை ஊக்கப்படுத்தவும் குருத்துவத்திற்கு துணை புரியவும் பங்கு மக்களிடமிருந்து இறை அழைத்தல் உருவாக வேண்டும் என்னும் எண்ணத்துடன் முக்கூட்டுக்கல் இளங்குருமட அதிபர் பேரருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமையில் அருட்தந்தை ஜார்ஜ் மற்றும் 12 அருட்சகோதரர்கள் சூசைபுரம், புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்திற்கு வந்தனர். அவர்கள் பங்கின் இறை அழைத்தலுக்காக சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுத்து ஜெபித்தனர்.

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

ஜூன் மாதம் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6:30 மணிக்கு திருப்பலியும் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. ஜூன் 21 மூன்றாவது வெள்ளிக்கிழமை, கல்லுவிளை சீனாய் தியான இல்ல இயக்குனர் அருட்தந்தை சாஜன் நெட்டப்பொங்கு அவர்கள் தலைமையில் தியானமும் இரவு நேர்ச்சை உணவும் வழங்கப்பட்டது. ஜூன் 16, ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் இயக்குனர் அருட்தந்தை ஜிம்மி அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் மாதர் ஜோதிஸ் இயக்கத்தினரை சந்தித்து ஆலோசனைகள் வழங்கினர். ஜூன் 22, சனிக்கிழமை மாலை ஆனக்குழி சிற்றாலய ஆண்டு விழா ஜெபத்துடன் நடைபெற்றது. ஜூன் 29 ஆம் தேதி பங்கு பேரவை கூட்டம் பங்குத்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை, கல்லுவிளையில் நடைபெற்ற மறைமாவட்ட மறைக்கல்வி

ஆண்டு விழாவின் போது பாலப்பள்ளம் பங்கைச் சார்ந்த அருட்சகோதரி லின்ஸ் SABS அவர்கள் தனது மறைக்கல்வி பணியின் வெள்ளி விழாவிற்காக கௌரவிக்கப்பட்டார்.

## ▶ புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை

ஜூன் 1, சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பங்குத்தந்தை தலைமையில் பங்குபேரவை கூட்டம் நடைபெற்றது. ஜூன் 10, 2024 - 2025 ஆம் கல்வியாண்டின் தொடக்கம் ஆதலால் திருப்பலியின் போது கல்வி பயின்று வரும் அனைத்து பிள்ளைகளுக்காக சிறப்பு ஜெபம் நடைபெற்றது. ஜூன் 9, ஞாயிற்றுக்கிழமை மறைக்கல்வி பிள்ளைகளுக்கு ஆராதனை மற்றும் அருளடயாள வகுப்பினை



பங்குத்தந்தை அவர்கள் நடத்தினார்கள். ஜூன் 11, செவ்வாய்க்கிழமை திருவிழாவை முன்னிட்டு பங்குத்தந்தை அவர்கள் அனைத்து வீடுகளையும் சந்தித்து ஜெபித்தார்கள். ஜூன் 15, சனிக்கிழமை பங்குத்தந்தை தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஜெப கூட்டம் திருமதி சிந்து ராணி அவர்களது இல்லத்தில் வைத்து நடைபெற்றது.

## ▶ பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்.

பாத்திமாபுரம், பாத்திமா அன்னை ஆலயத்தில் ஜூன் 2, ஞாயிற்றுக்கிழமை திருப்பலியைத் தொடர்ந்து பங்குத்தந்தை ஷிஜோ அவர்கள் மறைக்கல்வி தொடக்கவிழாவினை குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள். ஜூன் 7, முதல் வெள்ளிக்கிழமை திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. இதில் அனைத்து பங்குமக்களும் கலந்து கொண்டனர்.

# நித்திரவிளை

## ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

ஜூன் 02, ஞாயிற்றுக்கிழமை காலைத் திருப்பலியுடன் 2024 - 2025 கல்வியாண்டின் மறைக்கல்வி தொடக்கவிழா ஆரம்பமானது. தொடர்ந்து ஒரு மணி நேரம் நற்கருணை ஆராதனை வழிபாடு அருட்தந்தை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் மிஷன்லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்க செயல்பாடுகளும் ஆரம்பமானது. ஜூன் 10 திங்கட்கிழமை காலை 6:30 மணிக்கு பள்ளி செல்லும் மாணவர்களுக்காக சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் திருப்பலியில் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

ஜூன் 23, ஞாயிற்றுக்கிழமை முஞ்சிறை புனித ஜார்ஜியார் கிளைச்சபை (ஆண்கள்)



சார்பில் திட்டம் வழங்கும் விழா நித்திரவிளை வட்டார சபை தலைவர் சகோதரர் லால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளைச்சபையின் ஆத்மீக ஆலோசகர் அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் பயனாளிகள் ஏழு பேருக்கு ரூபாய் பத்தாயிரம் வீதம் திட்டத்தொகை வழங்கி சிறப்பித்தார். பெண்கள் கிளைச்சபையையும் தலைவர் அவர்கள் பார்வையிட்டு திட்டங்கள் குறித்து எடுத்துக் கூறினார்கள்.

## ▶ புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

ஜூன் 02 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு காலை ஜெபத்துடன் திருப்பலி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து துணை பங்குத்தந்தை லின்டோ அவர்கள் தலைமையில் மறைக்கல்வி மற்றும் மிஷன்லீக் இயக்க செயல்பாடுகள் ஆரம்பமானது. இந்நிகழ்வில் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும்

பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். ஜூன் 9 ஞாயிற்றுக்கிழமை புனித மரியம் திரேசியாவைப் பாதுகாவலராக கொண்ட உறவிய மக்களால் புனிதையின் திருநாள் கொண்டாடப்பட்டு, உறவிய ஆண்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை புனித அந்தோனியார் உறவிய மக்களால் திருப்பலி சிறப்பிக்கப்பட்டு உறவிய ஆண்டுவிழாவும் நடைபெற்றது. அனைத்து மக்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்து இறை ஆசீர் பெற்றனர்.

### புனித அமல மரியா ஆலயம் – சீனிவிளை

ஜூன் 02 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலிக்குப் பின் மறைக்கல்வி மிஷன் லீக் மற்றும் குழந்தை ஈசோ இயக்க செயல்பாடுகள் அனைத்தையும் ஒளியேற்றி அருட்தந்தை சுமேஷ் அவர்கள் துவங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மேலும் மறைக்கல்வியின் வளர்ச்சிக்காக ஆசிரியர் கூட்டம் கூடப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

பிலாங்காலை, புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலியைத் தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. ஜூன் 23 ஞாயிற்றுக்கிழமை அனைத்து உறவிய பொறுப்பாளர்கள் மற்றும் பங்குபேரவை உறுப்பினர்களுக்கான ஒரு வகுப்பானது அருட்தந்தை அஜின் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அன்றைய தினம் காலையில் திருப்பலியில் புதிய உறவியப் பொறுப்பாளர்களின் பதவியேற்பு நிகழ்வு குத்துவிளக்கு ஏற்றி உறுதிமொழி கூறி நடைபெற்றது. மேலும் மிஷன்லீக்கின் 2024-2025 கல்வியாண்டின் தொடக்க விழா குத்துவிளக்கு ஏற்றி துவங்கப்பட்டது. பங்குத்தந்தை புதிதாக இணைந்த மாணவர்களுக்கு மிஷன்லீக் badge அணிவித்தார். ஜூன் 30 ஞாயிற்றுக்கிழமை, புதிய பங்குபேரவை பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றது. பங்குபேரவையினர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அன்றைய தினம் மிஷன்லீக் மாணவர்களுக்கு அருட்சகோதரி மெரின் அவர்கள் சிறப்பு வகுப்பு நடத்தினார். அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று நடத்தினார்

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

# தென்காசி மறைத்தளம்

## ▶ மாதாந்திர தியானம்

தென்காசி மறைத்தள அளவில் மாதாந்திர தியானமானது ஜூன் 8, சனிக்கிழமை வாஞ்சி நகர் ஆலயத்தில் நடத்தப்பட்டது. காலை 9.30 மணி அளவில் ஜெபமாலையுடன் தியானம் ஆரம்பமானது. அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் தியான உரை வழங்கினார். தொடர்ந்து அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் ஆராதனை நடத்தினார். அத்துடன் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை தோமஸ் கோய்ப்புறம் அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மறைத்தள அளவில் அனைத்து பங்குகளிலிருந்தும் இறைமக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் அருட்தந்தையர்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட மக்கள் தியானத்தில் பங்கு பெற்று பயனடைந்தனர்.

## ▶ மறைக்கல்வி தொடக்க விழா

ஜூன் 8, சனிக்கிழமை மறைக்கல்வி தொடக்கவிழா அருட்பணி ஆன்றணி மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பலிக்கு பின்பு அருட்பணி



ஆன்றணி மகேஷ் அவர்கள் புதிய மறைக்கல்வி ஆண்டிற்கான வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து மறைக்கல்வி இயக்குனர் அருட் தந்தை பிரின்ஸ் அவர்கள் குத்துவிளக்கேற்றி புதிய மறைக்கல்வி ஆண்டை துவங்கி வைத்தார்.

## ▶ மறைத்தள அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கூடுகை

மறைத்தள அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்களின் கூட்டமானது ஜூன் 29 , சனிக்கிழமை பண்பொழி டொரேத்தியன் கன்னியர் இல்லத்தில் வைத்து

மாலை 5 மணியளவில் ஆரம்பமானது. மறைமாவட்டத்தின் குருகுலமுதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்தார். தொடக்கத்தில் அருட்தந்தை தோமஸ் பொட்டாம்பறம்பில் அவர்கள் வழிபாட்டு முறை மற்றும் ஆராதனை ஆண்டினை குறித்தும்,



வத்திக்கான் சங்க ஏடுகளை குறித்தும் வகுப்புகளை நடத்தினார். அதன் பின்பு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டது .தொடர்ந்து மாலை ஜெபம் மற்றும் ஒப்புரவு அருட்சாதனமும் நடத்தப்பட்டது. தொடர்ந்து அன்பின் விருந்துடன் கூடுகையானது இனிதே நிறைவுற்றது.

# வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| புனித தோமையார் திருநாள் (துக்ரானா) | - ஜூலை 03 |
| மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் | - ஜூலை 08 |
| மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் | - ஜூலை 09 |
| மறைவட்ட அருட்தந்தையர்கள் கூட்டம் | - ஜூலை 10 |
| அல்போன்சா நடைபயணம் | - ஜூலை 20 |
| மறைமாவட்ட அளவில் புனித அல்போன்சா திருவிழா கொண்டாட்டம் | - ஜூலை 28 |
| இளங்குருக்கள் உருவாக்கல் பயிற்சி | - ஜூலை 29-30 |
| அருட்தந்தையர் பேரவை Presbyteral Council | - ஜூலை 31 |

## MONTHLY AGENDA – JULY 2024

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10.00 am | **KII :** Painting St. Thomas Picture |
| 2 | Tue | 10.00 am | **KKSSS : Cluster level meeting of Save a Family Program @ Anayadi** |
| 3 | Wed | | Dukarana : Feast of St. Thomas |
| 5 | Fri | 10.00 am | **SINAI : One day retreat @ Vattakottai** |
| 6 | Sat | 02.00 pm | **SMYM :** Animators' Training |
| 7 | Sun | 02.00 pm<br>02.30 pm | **LM :** Regional Meting @ Kottar Bishop's House<br>**VP :** CC Meeting @ Padanthalummodu |
| 8 | Mon | 10.00 am<br>03.00 pm<br>05.00 pm | **CML : Speech Competition on Dukrana**<br>**EC : UCC Monthly Meeting @ Kottar Bishop's House**<br>**Forane Priests Conference** |
| 9 | Tue | 05.00 pm | Forane Priests Conference |
| 10 | Wed | 05.00 pm | **Forane Priests Conference** |
| 11 | Thu | 03.00 pm | Uravium Forane Directors Meeting @ Padanthalummoodu |
| 12 | Fri | **10.00 am**<br>**10.00 am** | **KKSSS : Cluster level meeting of Save a Family Program @ Athencode**<br>**FA : Marriage Preparation Course @ Kalluvilai** |
| 13 | Sat | 10.00 am<br>10.00 am<br>10.00 am<br>03.00 pm | Recollection for Sisters @ Sangamam<br>**FA :** Marriage Preparation Course @ Kalluvilai<br>**SINAI :** One day retreat @ Palugal<br>**LM :** Executive Meeting @ Padanthalummoodu |
| 14 | Sun | 09.00 am<br>02.00 pm | **VP : CC Annual Day @ Nithiravilai**<br>**CML : Annual General Body Meeting** |

| | | | |
|---|---|---|---|
| 15 | Mon | 05.00 pm | **EC : UCC Karungal Meeting @ Karungal** |
| 17 | Wed | 10.00 am | **KKSSS :** Paliative care review meeting @ Vayalinkarai |
| 18 | Thu | 10.00 am | **KKSSS** : Cluster level meeting of Save a Family Program @ Kazhuvanthittai |
| 19 | Fri | 05.00 pm | **St. Alphonsa Feast begins at Nagercoil Shrine Church**<br>**9 days Novena starts** |
| 20 | Sat | 06.30 am<br>10.00 am | **Nadaipayanam to St. Alphonsa Shrine Church, Nagercoil**<br>**KKSSS : Exposure Visit of SAFP beneficiary families** |
| 21 | Sun | 03.00 pm | **LM :** Comituim Meeting @ Padanthalummoodu |
| 23 | Tue | 10.00 am | **KKSSS :** Financial Review Meeting of **CTWWC** project with CRS team @ Kalluvilai |
| 26 | Fri | 05.00 pm | **Holy Qurbana** @ Alphonsa Shrine – **Bishop Mar Albert Anasthas,** Diocese of Kuzhithurai |
| 27 | Sat | 10.00 am<br>10.00 am | **KKSSS :** Monthly review meeting of SHG Animators<br>**SINAI :** One day retreat @ Kalluvilai |
| 28 | Sun | 09.30 am | **St. Alphonsa Feast** Diocesan pilgrimage to Alphonsa Shrine, Nagercoil<br>Feast day **Holy Qurbana** by **Bishop Mar Paul Alappatt,** Diocese of Ramanathapuram and **Mar George Rajendran SDB** |
| 29 | Mon | 10.00 am | **Junior Priest' Meeting** |
| 30 | Tue | 10.00 am | **Junior Priest' Meeting** |
| 31 | Wed | 10.00 am | **Presbyteral Council @ Sangamam** |

**FR. THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS**



First Holy Communion, June 2, 2024,
Sacred Heart Church, Padanthalumoodu



Tenkasi Mission, One Day Retreat,
Vanchi Nagar, June 06, 2024




Vincent de Paul, Summer Training Closure and DbTech
Academic Year Inauguration, June 17, 2024



Parish Kaikkars and Accountants Workshop,
June 30, 2024, Sangamam



Catechism, Anniversary, June 30, 2024

**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570